# என் அருள் நாதா இயேசுவே

என் அருள் நாதா இயேசுவே
சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்

என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்?
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்

கை, தலை, காலிலும் இதோ
பேரன்பும் துன்பம் கலந்தே
பாய்ந்தோடும் காட்சி போல் உன்டோ?
முள் முடியும் ஒப்பற்றதே

சுராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்ரம்
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்திரம்

மாந்தர்க்கு மீட்பை கஸ்தியால்
சம்பாதிதீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்ரம் உண்டாகவே